1176

தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை 15-3-58 | சனிக்கிழமை | இதழ் 35

198379

பாத்திரப் படைப்பு: 2

முன்ஷியின் மிருணாலவதி

கதைக்கு நாயகியோ கடினச் சித்தம் உடையவள். கைதியாகக் கொணரப்பட்டிருப்பவனோ எத்தகைய உள்ளத்தையும் கவர்ந்துவிடக்கூடிய வலிவும் பொலிவும் உடையவன். இருவரும் சந்திக்கிறார்கள்... முடிவு?

- 2 -

உடம்போடு பிறந்த வைராக்கியத்தை இப்போது எங்கிருந்தோ இழுத்துக் கொண்டு வர வேண்டிய நிலை மிருணாலவதிக்கு ஏற்பட்டது. மனித வாழ்வின் பொது விதிகளுக்கு உட்பட்டும் ஆசாபாசங்களுக்குக் கட்டுப்பட்டும் வாழ்கிறவர்கள் முஞ்சனைப் போன்ற ஒரு பேரழகனைக் கண்டு மலைத்து நிற்பதில் நியாயமுண்டு. ஆனால், மிருணாலவதி அவர்களில் ஒருத்தியல்லவே! அவளுடைய உள்ளம் அவளைப் பார்த்து "ஏனடி அப்போது மலைத்து நின்றாய்?" என்று கேட்டது. "நானா மலைத்து நின்றேன்? என் தம்பியின் பகைவனை அலட்சியமாகப் பார்த்தேன். மனித குணம் எவ்வளவு மட்டமாக இருக்கிறது என்று கணக்குப்போட்டேன். புத்தி கெட்டவர்கள்தான் மலைத்து நிற்பார்கள். நான் மிருணாலவதி" என்று தன் உள்ளத்திற்குப் பதில் கூறிய மிருணாலவதி மீண்டும் தன்னை வைராக்கிய நிலைக்கு இழுத்துக்கொண்டாள். அவள் இப்போது ஒரு விந்தையான நிலையில் இருந்தாள். முப்பதாண்டுப் பழக்கத்தால் பற்றற்றுப் போய் இன்ப, துன்ப நிலைகளிலிருந்து விடுபட்டு வெட்ட வெளி வைராக்கியத்தில் வேரூன்றி நின்ற அவள் தன் இதயத்தின் ஒரு மூலையில் களங்கம் விழுந்திருப்பதை உணர்ந்தாள். ஏதோ ஒரு துக்கம், அவள் விரும்புகிற நிலைக்குப் புறம்பாக உள்ளத்தில் நின்றுகொண்டிருந்தது. அதையும் அவள் கைப்பிடியாகப் பிடித்துத்தான் வெளியேற்ற வேண்டியிருந்தது. முஞ்சனை இப்போது என்ன செய்வது என்று தம்பி தைலபன் கேட்ட கேள்விக்கு, 'கடுமையான தண்டனை விதிக்க வேண்டும்' என்று பதிலளித்தாள் மிருணாலவதி.

"கொலை செய்துவிடட்டுமா"- என்று கேட்டான் தைலபன். 'செய்துவிடு' என்று சொல்ல அவளுக்குத் துணிவில்லை. இந்தப் பலவீனம் ஏன் என்பதை அவளது நெஞ்சு உணர்ந்தது. அவள் உணரவில்லை. அவள் அதைப் பலவீனமாகக் கருதவுமில்லை, காட்டிக்கொள்ளவுமில்லை. கொலையைக் காட்டிலும் கடுமையான தண்டனை சித்திரவதை என்றும் அதையே செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினாள். சித்திரவதை கொடுமையானதுதான் என்றாலும் முஞ்சன் உயிரோடிருப்பானல்லவா! இதை மனதில் வைத்து மிருணாலவதி தண்டனையை நிர்ணயிக்கவில்லை. ஆனால் ஆசிரியர் முன்ஷி முறையாகக் கடைப்பிடிக்கும் மனோதத்துவம் இதுதான். "அவனைச் சந்தித்து என்ன செய்கிறேன், பார்!" என்று முழங்குகிறாள் மிருணாலதி. அவள் என்ன செய்கிறாள் என்பது வேறு விஷயம். ஆனால் சந்திக்கிறேன் என்பது மனோதத்துவம். அவனைச் சந்திப்பதில் அந்த மனதுக்கு ஏதோ ஆசை விழுந்திருப்பது புலனாகிறது. மிருணாலவதி அப்படி நினைக்கவில்லை. ஆனால் கதைப்போக்கில் படிப்பவர்களுக்கு அந்த எண்ணம் ஏற்படச் செய்திருக்கிறார் முன்ஷி. இரக்கத்தையும் கருணையையும் காதலையும் பாசத்தையும் எளிய- சிறிய- இனிய உணர்ச்சிகளையும் உண்டாக்குகிறவர்கள் கவிஞர்கள் எனத் தீர்மானித்து அவர்க[illegible]வத்து முடித்துவிட்ட மிருணாலவதியிடம், அவர்கள் இல்லாமலேயே அந்த உணர்ச்சிகளெல்லாம் தலை தூக்க ஆரம்பித்தன. முஞ்சன் மீது அவர்களுக்கு வெறுப்பு இருந்தது; ஆத்திரம் இருந்தது; அது அதிகமாகவும் பெருகி இருந்தது; ஆயினும் முஞ்சனைச் சந்திப்பதில் அவர்களுக்குப் பயமும் இருந்தது. அவள் துணிச்சல் தளர்ந்தது. மீண்டும் அந்தத் துணிச்சலை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். தர்மத்தின் அவதாரமாகத் தன்னைக் கருதிக்கொண்ட மிருணாலவதி, முஞ்சன் தர்மத்தின் விரோதி என்பதையே நிரூபிக்க விரும்பினாள். முஞ்சனைச் சந்திப்பதில் அவளுக்கு ஏதாவது களங்கம் ஏற்பட்டால்...? ஆம்; ஏற்படும்! அவனைச் சந்திப்பபதே ஒரு களங்கம்தானே...அதெப்படிச் சொல்ல முடியும்? அவள் மனம் தளர்ந்தால் தானே களங்கம் பிறக்கும்? முப்பதாண்டு வலுவுள்ள கடும் வைராக்கியம் முஞ்சனைப் பார்ப்பதாலா கெட்டுவிடப்போகிறது? அவள் துணிந்தாள். அவனைப் பார்ப்பதற்காகச் சிறைச்சாலைக்குள் நுழைந்தாள். குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்த முஞ்சன், அடிமையாய் - கைதியாய் ஆதரவற்ற நிலையில் அங்கே கிடந்தான். கிடந்தானே தவிர அரண்மனையிலிருப்பதுபோல் அதே திமிரோடு, அழகோடு, உற்சாகத்தோடு, நிம்மதியோடு உறங்கிக்கொண்டிருந்தான். தன் அவலத்தனத்தை அவன் சிறிதும் உணர்ந்தவனாகவே இல்லை. கர்வம் குலைந்து அவன் தளர்வுற்றிருக்கும் நிலையைக் காணவந்த மிருணால், ஒருகணம் திகைத்தாள். அவள் ஆத்திரம் வளர்ந்தது. சென்றுவிடத் திரும்பினாள். முஞ்சன் விழித்தான். சிரித்தான். எக்களிப்பும் இறுமாப்பும் அந்தச் சிரிப்போடு பின்னிப் பிறந்தன.

"மிருணாலவதி! வந்ததோ வந்தாய், கொஞ்சம் தங்கிவிட்டுப் போயேன்"-என்றான்.

—அந்தக் குரல், அந்த இனிமை, தூய்மை, நட்புணர்ச்சி - மிருணாலை என்னவோ செய்தது. ஆனாலும் அவள் அந்தக் குரலால் அசைந்துவிடவில்லை. அவள் பதில் சொல்லவில்லை; காரணம் தன் குரல் எப்படி ஒலித்துவிடப் போகிறதோ என்ற பயம்! தைலங்கணத்துச் சராசரி மனிதர்களையே வைராக்கிய உலகத்திற்குத் திருப்பிவிட்ட அவள், தான் துவக்கிய இடத்திலேயே தடுமாறிக்கொண்டிருந்தாள். முஞ்சன் அவளைப் புகழ்ந்தான். அந்த முக்கால் கிழவியை உலகமே புகழ்வதாகச் சொன்னான். எந்த வார்த்தைகள் அவளுடைய உறுதியைக் குலைக்குமோ, எந்தப் பார்வை அவளைப் பலவீனப்படுத்துமோ, எந்த அங்க அசைவுகள் அவளை பேதலிக்க வைக்குமோ அவற்றையெல்லாம் கையாண்டான். தன்னை அவள் பார்க்க வந்ததே ஆசையால் தான் என்றான். அவள் அவனை இழித்தும் பழித்தும் பேசினாள். "பாவியே, அரக்கனே, நீ கொல்லப் படுவாய்! நரகத்துக்கு அனுப்பப் படுவாய்!" என்றாள். முஞ்சன் சிரித்தான்.

சொன்னான்:—

தைலங்கணத்தின் தவப்பெண்ணே! சொர்க்கத்தையும் நரகத்தையும் பற்றி நான் கவலைப்படவில்லை நான் அனுபவிப்பதைவிட அதிகமான சுகம் சொர்க்கத்தில் கிடைக்காது. நரகத்திற்குப் போவதால் அது குறைந்தும் விடாது. என் மாளிகையில் அனுபவித்த ஆனந்தத்தையே இந்தச் சிறைச்சாலையிலும் அனுபவிக்கிறேன். வெற்றியில் கிடைக்கும் சுகமே தோல்வியிலும் கிடைக்கிறது. என்னுடைய வல்லமை நிலைத்திருக்கும்வரை இது உண்மைதான்."

-மிருணாலவதிக்கு அவன் உபதேசிக்கவும் ஆரம்பித்தான். "வாழ்க்கையை ஏன் வீணாக்குகிறாய்" என்று கேட்டான்.

"எப்படி வாழ வேண்டும்?" என்று அலட்சியமாகக் கேட்டாள் மிருணாலவதி.

அவன் சொன்னான்:—

"நான் எப்போதும் படைப்பின் ரசத்தைப் பருகிக்கொண்டிருக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் ஒரு விநாடியும் துக்கத்தில் கழிந்ததில்லை. ஒரு காரியத்திலும் வாழ்க்கையின் இன்பம் கிடைக்காமல் இருந்ததில்லை. ஒவ்வொரு விநாடியிலிருந்தும் ஒவ்வொரு வேலையிலிருந்தும் நான் இனிமையைத்திரட்டுகிறேன். நீ இப்படி வாழ்ந்திருக்கிறாயா?"

மிருணால் அப்படி வாழ்ந்தவளல்ல. துன்பத்தை அவள் அனுபவித்ததில்லை. இன்பத்தைப் பருகியதில்லை. வெட்ட வெளியில் தனி நடைபோட்டது அவளதுவாழ்க்கை. இங்கே இருதயத்தைச் சூன்யமாக்கி ஒரு கணக்குக் காட்டுகிறார் முன்ஷி.

இருதயம் மைய மண்டபம்- அதில் எந்த உணர்ச்சியுமில்லை. அதன் வலது பக்கம், சிறிது தூரத்தில் இன்பம் இருக்கிறது. இடது பக்கம் சிறிது தூரத்தில் துன்பம் இருக்கிறது. துன்பத்தை அடக்கி இருதயத்திற்குள் சமாதி வைத்துவிடுவதால் இன்பம் கிடைத்துவிடுமா? துன்பம் இல்லாத நிலைதான் இன்பமா? இல்லை, இன்பமென்பது தனிப் பொருளா? தனிப் பொருள் என்கிறான் முஞ்சன்.

கண்ணதாசன்

மனதைக் கட்டிப் போட்டுவிடுவதால் துன்பத்தை அடக்கிவிடலாம். ஆனால் அதுவே இன்பமல்ல. அதற்கு, மேலும் ஒரு அடி எடுத்து வைக்க வேண்டும். அதை முஞ்சன் அவளுக்குப் போதிக்கிறான். இன்பத்தை நோக்கி நடக்கத் தூண்டுகிறான். ஆனால் மிருணால்? அவள்,

— அடுத்த பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 ‖ 15—3—58 ‖ இதழ் 35

வெட்கம்! வெட்கம்!!

மொழிப் பிரச்சினை குறித்து சென்னை சட்ட மன்றத்தில் பலத்த வாதப் பிரதி வாதங்கள் நடைபெற்று வருகின்றன. நாட்டின் நலத்திற்கான கொள்கைகளை வகுத்துக்கொண்டு இயக்கத்தை நடத்துவோரின் சொற்பொழிவுகளில் உண்மை மிளிருவதையும், எங்கோ இருக்கிறவர்கள் மனம்குளிர மனச்சான்றைக் கொன்றுவிட்டுப் பேசுவோரின் பேச்சில் அசட்டை தோன்றுவதையும் நம்மால் காணமுடிகிறது.

தி. மு. கழக உறுப்பினர்கள் அனைவரும், சென்ற கிழமை, மொழிப் பிரச்சினை வாதத்திற்கு எடுத்துக்கொண்டபோது அருமையான திருத்தங்களைக் கொண்டுவந்தார்கள். இந்தி வேண்டுமென்போர், வேண்டாமென்போர் அனைவரது துயரங்களையும் போக்கும் திருத்தங்கள்தான் நமது கழக உறுப்பினர்கள் கொண்டுவந்த திருத்தம். அந்தத் திருத்தங்களை கனம் சுப்ரமணியமும் ஏற்றுக்கொள்ளவில்லை, காங்கிரஸ் உறுப்பினர்களும் அதை ஆதரிக்கவில்லை. காங்கிரஸ் உறுப்பினர்கள்தான் ஆதரிக்கவில்லை; போகட்டும். பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து வெற்றி கண்டவர்கள் கூட ஆதரக்கவில்லை என்கிறபோதுதான் இந்த நாட்டுக்கே உரித்தான தன்மான உணர்ச்சி எவ்வளவு தூரம் கெட்டுப்போயிருக்கிறது என்பதை மிகுந்த கவலையோடு உணர முடிகிறது. எல்லாத் துறையிலும் காங்கிரசை ஆதரிக்கிறவர்கள் பொதுத் தேர்தலில் ஏன் காங்கிரசை எதிர்த்தார்கள்? பொதுமக்களிடம் எதைச் சொல்லி வாக்குகளைப் பெற்றார்கள் என்பது புரியவில்லை.

கம்யூனிஸ்டுகள் காங்கிரசை எதிர்த்தார்கள்—அவர்கள் வாக்காளர்களுக்கு விரோதமாகக் காங்கிரசை ஆதரிக்கிறார்கள்.

கா. சீ. க.வினர் காங்கிரசை பலமாக எதிர்த்தார்கள்; அவர்களும் காங்கிரசை, மொழிப்பிரச்சினையில் ஆதரிக்கிறவகையில் சட்டமன்றத்தில் வாக்களிக்கிறார்கள்.

பி. சோ. கட்சியும் இந்தப் பாதையிலேயே போய்க்கொண்டிருக்கிறது.

மொழிப் பிரச்சினை என்பது, மற்ற பிரச்சினைகளைப்போல் படித்தவர்களுக்கு மட்டுமே புரியக்கூடிய பிரச்சினையோ, அல்லது ஒரு சில்ரை மட்டுமே பாதிக்கக்கூடிய பிரச்சினையோ அல்ல. நடைவண்டியோட்டும் பாலர்களிலிருந்து நரைவிழுந்த கிழவர்வரை அனைவரையும் தவிக்க வைக்கும் மிகப் பெரிய சிக்கல். சில பிரச்சினைகளை, மக்களுக்கு விரோதமாகக்கூட ஆதரிக்கலாம். அறிவாளிகள் ஆய்ந்தோய்ந்து பார்த்து அது பற்றிய விளக்கத்தை பொதுமக்களுக்குச் சொன்னால் பொதுமக்கள் புரிந்துகொள்வார்கள். ஆனால் மொழிப் பிரச்சினையில் இந்தியை ஆதரிக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள் நீங்கலாக மற்றவர்கள் அனைவருமே தமிழகத்தில் இந்தியை வெறுக்கிறார்கள். ஆனாலும் சட்ட மன்றத்தில் பெரும்பான்மையோர் தங்களின் உண்மையான உள்ளங்களைத் திறந்து காண்பிக்கப்பயப்படுகிறார்கள். காமராசரும் கக்கனும் பயப்படுவதிலே நியாயம் இருக்கிறது. கல்யாணசுந்தரமும், சின்னதுரையும் ஏன் பயப்படுகிறார்கள்? எதிர்காலத்தில் என்ன வெற்றியை நம்பி இவர்கள் தமிழகத்தைப் புறக்கணிக்கிறார்கள். அது மட்டுமல்ல; இன்னொரு மானக்கேடான செயல் ஒன்று நடைபெற்றிருக்கிறது. தி. மு. கழகம் இந்தியை எதிர்க்கிறபோதெல்லாம், காமராசரிலிருந்து அத்தனை பேரும் என்ன சொல்கிறார்கள்? "ஆங்கிலத்தை மோகிப்பவர்கள் தமிழை அரியணை ஏற்றி மகிழ விரும்பாதவர்கள்" என்று வான்முட்ட முழக்கமிடுகிறார்கள். ஆங்கிலம் வேண்டுமென்பது தமிழுக்குத் துரோகமாம்! சென்ற வாரம் சட்ட சபையிலே நடைபெற்றது. என்ன? "தமிழை ஆட்சி மொழியாக்கிவிட்டோம்" என்று பெருமைப்படும் அமைச்சர்கள் மத்தியில் தமிழ் நாட்டு சட்ட மன்றத்தில் ஒரு உறுப்பினர் இந்தியில் பேசியிருக்கிறார். பேசலாமா என்று கேட்டதற்கு, 'பேசலாம்' என்றும் பதில் கிடைக்கிறது. ஆங்கிலமா, இந்தியா என்ற தகராறுக்குப் பதிலாக இங்கே தமிழா, இந்தியா என்ற தகராறு அரும்புவிடுகிறது. இதையும் எல்லாக் கட்சிகளும் வரவேற்கின்றன-தி. மு. க.வைத் தவிர! என்ன பொருள் இதற்கு? பொதுத் தேர்தலோடு ஜனநாயகத்தின் கடமை முடிந்துவிட்டதாக அகில இந்தியக் கட்சிகள் கருதுகின்றன. ஆனால் தி. மு. கழகம் பொதுத் தேர்தலுக்குப் பிறகுதான் ஜனநாயகம் வேலை செய்யத் தொடங்குகிறது என்று நினைக்கிறது. இந்தக் கருத்து வேறுபாட்டில் புதையுண்டு கிடக்கும் பெரும் பொருளைப் பொதுமக்கள் உணர்கின்றவரையில் மக்களின் இதயங்கள் சட்ட மன்றத்தில் எதிரொலிக்கப் போவதில்லை. ★

6-4-58ம் தேதியன்று
பன்மொழிப்புலவர் பொன்விழா நிதிக்காக
கலை நிகழ்ச்சிகள்
சொற்பொழிவு, இசை, நடனம், நாடகம்
இத்தனையும் உண்டு.
★ முன்பு வாங்கிய டிக்கட்டுகள் இதற்குச் செல்லுபடியாகும்.
★ இடமும் மற்ற விபரங்களும் விரைவில் அறிவிக்கப்படும்.

—முன் பக்கத் தொடர்ச்சி—

இன்பம், துன்பம் இரண்டையுமே சமாதி வைத்துவிட்டவள். உணர்ச்சிகளை மரத்துப் போகச் செய்து சூன்ய நிலையில் சிலைபோல நடமாடுபவள். இப்போது சமாதியைப் பிளந்துகொண்டு இன்ப துன்பங்கள் தலை தூக்குகின்றன. முஞ்சனின் உபதேசம் ஏற ஏற மிருணால் தரையைக் காலால் உதைத்தாள். வறட்டு வைராக்கியத்தை இழுத்து நிறுத்திக்கொண்டு, "நீ இன்னும் எவ்வளவு காலம் உயிரோடிருக்கிறாய் என்று பார்க்கிறேன்" என்றாள்.

முஞ்சன் சிரித்தான். "இப்போது உயிரோடிருக்கிறேன். வரப் போவதைப்பற்றி எனக்கென்ன கவலை? என்னுடையஒவ்வொருமயிர்க்காலிலும் புழு விழுந்தாலும்நான்கவலைப் படமாட்டேன். என்னை அடக்க நீ வந்தாய். உன்னை வசீகரிக்க நான் முயன்றேன். ஓரளவு நான் வெற்றி பெற்றுவிட்டதாகவே நம்புகிறேன். உன்னைப் போன்ற கர்விகளை வசப்படுத்துவதைவிட வேறு என்னசுகம் வேண்டும்."

—மிருணாலவதி துடித்தாள். கொடுமையையும் சித்த உறுதியையும் பிரதிபலித்து ஏற்கனவே சிவந்திருந்த அவள் முகம் மேலும் சிவந்தது.

"முஞ்சா, நீ அனுபவிக்க வேண்டியது இன்னும் நிறையப் பாக்கி இருக்கிறது" என்றாள்.

"இப்போது அனுபவத்ததே அதிகம்தான்"-என்றான் அவன்.

அவள் துன்பத்தைப் பற்றிச் சொன்னாள். அவன் இன்பத்தைப் பற்றிப் பேசினான். அவள் நடந்தாள். அவன் சிரித்தான். அவள் அரண்மனைக்குள் நுழைந்தாள். - அவள் சுகமாகவேதான் இருந்தாள். ஆனாலும் ரத்தத்தில் கொதிப்பிருந்தது. இரும்புக்கோட்டைபோல் கட்டிக்காத்த அவள் இதயத்துக்குள் ஏதோ நுழைந்துவிட்டது போல இருந்தது. அது என்ன என்று புரிந்துகொள்ளச் சக்தியில்லாமல் திண்டாடினாள். முஞ்சனைப் பார்க்கப்போன மிருணால் வேறு; பார்த்துவிட்டுத் திரும்பிய மிருணால் வேறு. உடலைத் தூய்மைப்படுத்துவதற்காக அவள் நீரில் மூழ்கினாள். உள்ளத்தைத் தூய்மைப்படுத்த தியானத்தில் அமர்ந்தாள். முஞ்சனைப் பார்த்ததால் மட்டுமல்ல, அவள்மேல் கோபங்கொண்டதாலும் தூய்மை கெட்டுவிட்டது. அவளைப் போன்ற துறவிகளுக்குக் கோபம் வரலாமா? சலனமற்ற பார்வையோடல்லவா அவள் பாவ புண்ணியங்களை ஆராயவேண்டும்! ஆனால் எதுவும் அவளைப் பழைய வைராக்கிய ராணியாக ஆக்கவில்லை. குழப்பத்தில் ஆழ்ந்தாள். தியானத்தால் சினத்தை ஒதுக்கினாள். சினம் ஒதுங்கியதும் முஞ்சன்மீது இரக்கம் பிறந்தது. அந்த இரக்கம் எந்த வகையான ஆசை உணர்ச்சிகளிலும் பிறந்ததல்ல. பணம் படைத்த ஒருவன் ஏழையிடம் காட்டும் கருணை போன்றது - என்றுதான் அவள் கருதினாள். ஆனால் அவள் நெஞ்சு மட்டும் ஏனோ முனகிக்கொண்டிருந்தது. அந்த முனக்கம், கம்பீர மிகுந்த இரக்கம், பழைய வைராக்கியம் மூன்றுக்குமிடையில் முறைப்படி கொடுத்துத் தீர வேண்டிய தண்டனையைப்பற்றியும் அவள் யோசித்தாள். தைலங்கணத்தின் முறை, தோல்வியுள்ள மன்னர்களை மரத்தினால் செய்த ஒரு கூண்டில் அடைத்து அரண்மனைக்கு முன்னால் வைத்து மக்கள் அவர்கள் மீது காரி உமிழும்படி செய்வதாகும். இது மன்னர்களின் கர்வத்தைக் குலைக்கும். இந்த எண்ணத்தை மிருணாலவதி தன் தம்பியிடம் தெரிவித்தாள். கூண்டில்முஞ்சனை அடைக்க ஆணை பிறந்தது. அந்த ஆணையைத் தொடர்ந்து தனது பழைய கம்பீர நடைக்குத் திரும்பிவிட அவள் முயன்றுகொண்டிருந்தாள். அவள் ஒரு ராணி. முஞ்சன் ஒரு அடிமை. அந்தக் கண்களோடுதான் அவள் இனி அவனைப் பார்க்க வேண்டும். முஞ்சன் கர்வம் குலைந்து கண்ணீர் வடித்து கதறித் துடித்து அவள் கால்களில் விழுந்து பிச்சை கேட்பான் என்று அவள் கருதினாள். அந்தக் கனவிலேயே பெரு மகிழ்வு கொண்டாள். நாளை முஞ்சன்கூண்டில் அடைக்கப்படுவான். கூட்டம் ஏராளமாகக் கூடும். இதைஎண்ணி அன்று முழுதும் அவள் தூங்கவே இல்லை. ஆனால் மறு நாள்...?

- தொடரும் -

வெண்பாப் போட்டி-13.

ஈற்றடி :

தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

முடிவு தேதி 22-3-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

தென்றல்

198379



முதுரை விளக்கம்

முருகு சுப்பிரமணியன்

புல்லும் வாழ்கிறது நெல்லினால்!

உலகம் எப்படி இயங்குகிறது?

இது பெரிய கேள்வி. இந்தக் கேள்வியை உங்கள் ஆசிரியரிடம் கேளுங்கள். உங்கள் அப்பாவிடம் கேளுங்கள். உங்கள் அண்ணனிடம் கேளுங்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள்.

சாலையில் வரிசை வரிசையாக நிற்கின்றன வேப்ப மரங்கள், அவை தரும் நிழலில் வெயில் நேரத்தில் ஒதுங்கி நின்றால் அந்த மரங்களின் அருமை தெரியும். 'நிழலின் அருமை வெயிலில்' தெரியும் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள்.

சாலைக்கு அழகும் மக்களுக்கு நிழலும் காற்றும் தருபவை மரங்கள். அந்த மரங்களின் பயனைப் பெரும்பாலும் ஊரிலுள்ள எல்லோருமே அனுபவிப்போம். அப்படி அனுபவிக்கும்போது அந்த மரங்களை நட்டவர் எவர் என்று யாராவது யோசித்திருக்கிறோமா?

சொந்தத் தோட்டத்தில் மரம் நடுவது அது தரும் பலனை எதிர்பார்த்து. அது சாதாரணமாக எல்லோரும் செய்யக்கூடியதே! யாருக்கும் சொந்தமில்லாத பொதுச்சாலையில் மரம் நடுவது எப்பயனைக் கருதி? இக்கேள்விக்கு விடை கண்டுவிட்டால் உலகம் எப்படி இயங்குகிறதென்ற கேள்விக்கும் நாம் மாற்றம் கண்டுவிடமுடியும்.

ஊருக்குப் பொதுவான சாலை. தனிப்பட்ட எவருக்கும் சொந்தமில்லாத இடம். அங்கே மக்களுக்கு குளிர் நிழலும் தூய காற்றும் கிடைக்க வேண்டுமென்பதற்காக வரிசை வரிசையாக மரங்களை நட்டவர் யார்?

ஊரிலுள்ள மக்கள் எல்லாரும் குடி நீர் எடுக்க ஊருணி வெட்டியவர் யார்? எல்லாப் பிள்ளைகளும் கல்வி பெற்றார், கண்ணைப் பெற்றார் என்னும் நிலைவரப் பொதுப் பள்ளியைக் கட்டியவர் யார்? கோடையிலே இளைப்பாற நந்தவனத்தையும் பந்தலையும் கண்டு அங்கே நீர்வேட்கை தீர்க்கக் குளிர் மோர்ப் பானையை வைத்தவர் யார்? நோய் நொடியின்றி மக்கள் வாழப் பொது வைத்தியசாலைகளை ஏற்படுத்தியவர் யார்?

இக்கேள்விகளுக்கெல்லாம் விடை ஒன்றுதான். தமிழ் நூல்களில் உலகம் எவ்வாறு இயங்குகிறது என்னும் உண்மை நன்கு ஆராயப்பட்டிருக்கிறது. தமிழறிஞர்களின் முடிந்த முடிபு உலகம் நல்லவர்களால் இயங்குகிறது என்பதே.

ஊரில் ஒரு பள்ளி, ஒரு வைத்தியசாலை ஒரு சத்திரம் எழ வேண்டுமானால் நல்லவர்கள் சிலரின் முயற்சியாலேயே அவை உருவாகமுடியும். அரசாங்கம் பள்ளி முதலிய பொதுப் பணிகளுக்கு நிதி தருகிறதெனினும் கல்விப் பொறுப்பை அது முழுமையாக ஏற்றுக்கொண்டு விடுவதில்லை. யாராவது பள்ளி கட்ட முன் வந்தால் அரசினர் அதற்குப் பகுதி உதவி செய்ய இணங்குவார்கள். இதுதான் நிலை. ஆகவே அரசினரால் உலகம் இயங்குகிறது என்னும் கருத்து பொருந்தாது.

எந்தப் பொதுமுயற்சிக்குப் பணம் தானே முக்கியம்! ஆதலால் செல்வர்களாலேயே உலகம் இயங்குகிறதென்று சொல்லலாமா? எல்லாச் செல்வர்களும் தம்பணத்தைப் பொதுப் பணிக்கு உதவுகிறார்களென்று சொல்லமுடியுமா? ஆகவே செல்வர்களால் உலகம் நடக்கிறதென்னும் கருத்தும் சரியன்று.

புல்லுக்கும் பாய்கிறது

அப்படியெனில் அறிஞர்களால் உலகம் இயங்குகிறதென்று கூறலாமா? அஃதும் சரியன்று. படித்தவர்கள் எல்லோரும் பொதுநல நாட்டமுடையவர்கள் என்று சொல்ல முடியாது.

பொதுநன்மை செய்ய வேண்டுமென்னும் எண்ணம் சிலரின் உள்ளத்தில் மட்டுமே அரும்புகிறது. அத்தகைய நல்லவர்களாலேயே உலகம் இயங்குகிறது. உலகத்திற்கு அச்சாணியாக அவர்கள் விளங்குகிறார்கள்.

'பண்புடையவர்கள் சிலர் இருப்பதாலேயே உலகம் நடக்கிறது; இல்லையேல் அது மண்மூடிப் போகும்' என்று வள்ளுவர் சொல்லுகிறார்.

'நல்லாரின் பெருநிலையம் இந்த வையம்' என்பது பாரதிதாசன் வாக்கு.

மூதுரையிலும் உலகம் எப்படி இயங்குகிறது என்னும் கேள்விக்கு விடை கூறப்படுகிறது. மிகச் சிக்கலான இக்கேள்விக்கு மூதுரை மிக எளிதாக விடை பகர்ந்துவிடுகிறது.

நெல்லுக்குத் தண்ணீர் இறைக்கிறோம். அத்தண்ணீர்வாய்க்காலில் முளைத்துள்ள புல்லுக்கும் பாய்கிறது. புல்லின் நன்மை கருதி நாம் தண்ணீரை இறைக்கவில்லை. எனினும் புல்லின் உயிர் வாழ்க்கைக்கும் நாம் மறைமுகமாக உதவிவிடுகிறோம்.

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நெல்லினால் புல்லும் வாழ்கிறது. அதுபோன்றே நல்லவர்களால் உலகம் வாழ்கிறது.

நல்லவர்களால் உலகம் வாழ்கிறதென்னும் கருத்தை ஔவைப் பாட்டி நல்லவர்களாலேயே உலகத்தில் மழை பெய்கிறதென்று கவிதை நயம் கனியச் சொல்கிறார்.

மூதுரைப் பாட்டைச் சொல்கிறேன். பெரும்பாலான தமிழ்க் குழந்தைகள் படித்திருக்கக்கூடிய பாட்டுத்தான்.

நெல்லுக்கு இறைத்தநீர்
வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே
பொசியுமாம்-தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல்
அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

நெல்லுக்கு அதனிடமிருந்து பெறும் பயனைக் கருதி நாம் தண்ணீர் இறைக்கிறோம். நாம் நாடோறும் உண்ணுகிற சோறு நெற் பயிர் நமக்கு அளிக்கும் பிச்சைதானே! நெற் பயிர்தான் வாழ்வதன் மூலம் உலகையும் வாழ வைக்கிறது. நெற் பயிரின் விளைச்சலே நம் உணவு. அது பெரும்பயன். அது தவிர்த்து நெல்லை முன்னிட்டு பாய்கின்ற தண்ணீரே, அத்தண்ணீர் செல்கின்ற வாய்க்கால் வரப்புகளில் முளைத்திருக்கும் புல் முதலிய செடிகளுக்கும் பயன்படுகிறது.

நாம் இறைக்கும் தண்ணீர் நெல்லுக்கு; அத்தண்ணீர் நாம் நினைக்காமலேயே புல்லுக்கும் பொசிகிறது. பொசிகிறது என்னும் சொல்லைக் கவனியுங்கள். நெல்லுக்குத் தண்ணீர் நிறைய வேண்டும்; கண்மாயைத் திறந்துவிட்டோ, கேணியிலிருந்து சால் போட்டு இறைத்தோதான் தண்ணீர் நெற்பயிருக்குப் பாய்ச்ச வேண்டும். ஆனால் புல்லுக்குத் தண்ணீர் கசிந்தால் போதும்!

செயற்கை மழைக் காலம்

'நல்லார் ஒருவர் ஊரில் இருந்தால் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' இது சற்று நம்ப முடியாத காரியமாக இருக்கிறதென்று எண்ணுவீர்கள். நல்லவருக்காக மழையாவது பெய்வதாவது என்று கேள்வி போடுவீர்கள்! ஏனெனில் இப்பொழுது செயற்கை மழையை வருவிக்கிற காலம்.

நம் வீட்டுக்கு யாராவது வராதவர்கள் பெரியவர்கள் வந்துவிட்டால் உடனே 'இன்று மழை நிச்சயமாகப் பெய்யும்' என்று நாம் சொல்வதுண்டு. எதிர்பாராமல் செய்து முடிக்கப்படும் பணிகளைப் பாராட்டுவதற்கும் அவ்வாறு கூறுவது வழக்கம்.

"ஊரில் மழை பெய்து செழிப்பாயிருக்கிறது" என்று சொல்வது ஊரில் பொதுவாக நல்ல நிலைமை இருப்பதையே குறிக்கும். மழை உலகத்தை வாழ வைக்கிறது. ஆகவே 'மழை பெய்யும்' என்னும் தொடரை நன்மை பிறக்கும் என்னும் பொருளிலேயே கொள்ள வேண்டும்.

'ஊரில் நல்ல மனிதர்களே இல்லை. எல்லாரும் தீயவர்கள், கயவர்கள், எப்படி மழை பெய்யும்?' என்று இப்பொழுதும் நம் பாட்டிமார்கள் கேட்பார்கள். நல்லவர்களாலேயே மழை பெய்கிறதென்பது நம்பிக்கை. அதாவது நல்லவர்களாலேயே உலகம் வாழ்கிறது; வளமாக இருக்கிறது என்பது கருத்து.

ஊரில் ஒரு பள்ளி எழுகிறதென்றால் அதற்கு நாட்டமாக முயல்கிறவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே. அத்தகைய பண்பாளர்கள் பிறருடைய ஏச்சுப் பேச்சுக்களைப் பொருட்படுத்தாது, தேவையான நிதி திரட்டிப் பள்ளியை நிறுவுகிறார்கள். அப்பள்ளி அத்தகைய பண்பாளர்களுக்குமட்டுமன்றி ஊரிலுள்ள எல்லோருக்குமே பயன்படுகிறது!

'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' என்று தமிழ் இலக்கியம் பேசுகின்ற நல்லவர்களை நினைக்கும்போது, ஒரு பெரியாரை நம் குழந்தைகளுக்கு நான் நிச்சயம் அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் வாலாஜாபாத் என்னும் ஊர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. அங்கே 'இந்து மதப் பாடசாலை' என்னும் பெயரில் ஏழைக் குழந்தைகளுக்கு உண்டியும் உறையுளும் தந்து கல்வி பயில்விக்கும் அற நிறுவனம் ஒன்று சிறப்பாக நடைபெற்று வருகிறது; மாசிலாமணி என்னும் பெயர் படைத்த பெரியார் அப்பள்ளிக்காகவே தம் வாழ்க்கையை அர்ப்பணித்து வருகிறார். தமிழகத்திலும் சரி தமிழர் வாழும் பிற நாடுகளிலும் சரி அப்பெரியாரை அறியாதவர் இருக்க முடியாது. மலாயாவுக்குக்கூட அப்பெரியார் சில ஆண்டுகளுக்குமுன் வந்து சென்றார்.

மாசிலாமணி என்னும் அந்நல்லார் அல்லும் பகலும் அப்பள்ளிக்காகவே பாடுபடுகிறார். அவர் பேச்சு மூச்சு எல்லாம் இந்து மதப் பாடசாலையின் வளர்ச்சிக்கே அவர் ஈட்டுகின்ற பணமெல்லாம் அப்பள்ளிக்குத்தான். தன் உயிரைப் பெருந் தொகைக்கு இன்ஷ்யூர் செய்து அத்தொகையையும் பள்ளிக்கே எழுதி வைத்திருக்கிறார்.

அவர் நடத்துகின்ற பாடசாலையில் பல நூறு ஏழைக் குழந்தைகள் கல்விச் செல்வம் பெறுகின்றனர். நல்லார் ஒருவரால் உலகம் பெறும் நன்மையன்றோ இது!

இத்தகைய நல்லார்கள், வள்ளல்கள் மலாயாவிலும் இருக்கின்றனர். அவர்கள் பள்ளிகளை நிறுவுகின்றனர், மருத்துவசாலைகளை ஏற்படுத்துகின்றனர். தங்களால் உலகம் நன்மைபெறச் செய்கின்றனர்.

நல்லவர்களால் இயங்குகிறது

ஔவையார் இப்பாட்டு மூலம் சொல்கின்ற நீதி என்ன? உலகம் நல்லவர்களால் இயங்குகிறது என்னும் உண்மையை நெல்லால் பயன் பெறும் புல்லைக் காட்டிப் போகிக்கும் ஔவை மூதாட்டி நமக்கு மறைமுகமாக ஒரு புத்திமதியையும் கூறிவிடுகிறார்.

அவர் சொல்கின்ற அறிவுரை என்ன?

நெல்போல உலகுக்குப் பயன்பட வாழுங்கள். நெல்லால் பயனடையும் புல் பூண்டுகளைப்போல உலகிலுள்ள மற்றவர்கள் உங்களால் நன்மைபெறட்டும்.

உலகத்தில் உங்களின் பொருட்டு மழை பொழியட்டும். அத்தகைய நல்லவர்களாக நீங்கள் வாழுங்கள்.

உலகம் உங்களால் நாளும் வாழட்டும். அதற்கு உறுதுணையாகநிற்கும் பண்பாளர்களாக நீங்கள் விளங்குங்கள்,

உலகுக்கு நீங்கள் சுமையாக இருக்கிற பலருக்குச் சுமைதாங்கியாக உங்கள் வாழ்க்கை அமையட்டும்.

உலகத்திடமிருந்து நீங்கள் பெறுகிற பயனைவிட உலகுக்கு நீங்கள் தருகிற பயன் பெரிதாக இருக்கட்டும்.

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்னும் வரி நம்மைமட்டும் நினைத்து வாழ்வதற்காகக் கூறியதன்று. உலகம் வாழ நாம் வாழ வேண்டும். அத்தகைய நல்லவர்களாலேயே உலகம் இயங்குகிறது நிலைத்திருக்கிறது.

நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பாய்கிறது. நல்லவர் பொருட்டுச் செய்யப்படுகிற நன்மை உலகிலுள்ள அனைவருக்கும் கிடைக்கிறது.

யானைக்குத் தருகிற கவளம் பெரிய உருண்டை அதனை உண்ணும்போது சிந்துகின்ற பருக்கைகள் ஆயிரக்கணக்கான எறும்புகளின் வயிற்றை நிறைத்துவிடும். நல்லாரினால் உலகுக்குப் பெய்கின்ற மழை—பயன் இது.

[மலாயா வானொலியின் தமிழ்ப் பள்ளிப் பகுதியில் 7-2-58ல் ஒலி பரப்பப்பட்டது.] ★

M241, NSMTL

குஞ்சரத்தின் கதை

தென்னரசு

மான்கொம்பு கொலையுண்டது சிங்கப்பெருமாள் அம்பலகாரருக்குச் சாதகமான நிகழ்ச்சிதான். ஆனால் அந்தக் கொலையால் தனக்குப் பெருவெற்றி கிடைத்துவிட்டதாகவோ, குஞ்சரத்தின் கற்பு காப்பாற்றப்பட்டுவிட்டதாகவோ அவர் நினைக்கவில்லை.

"மான்கொம்பு எப்படிச் செத்தான்? யார் கொன்றது? என்னைத் தவிர அவனுக்கு விரோதி யார்? குஞ்சரம் எங்கே? குஞ்சரத்திற்கு யாரும் காதலன் உண்டோ? அவன்தான் மான்கொம்பைக் கொன்றிருப்பானோ?"-இப்படியெல்லாம் குழம்பித் தவித்தார் அம்பலகாரர். பகைவர்களின் ஆயுதத்தைக் காட்டிலும் பாசத்திற்குத்தான் அதிக சக்தி இருக்கிறது. எதிரியின் தாக்குதலைத் தாங்கும் மனித இதயம் சொந்தக் குடும்பத்தில் நடக்கும் சிறு குழப்பத்தால் கலங்கிவிடுகிறது. மான்கொம்புவின் மறைவை அவர் மறந்தார். குஞ்சரம் எங்கே என்பதே அவருக்கு பெரிய பாரமாக இருந்தது. பணத்தைக் காட்டிலும், பசியைக் காட்டிலும் மானம் தானே அந்தக் காலத்தில் பெரிதாக இருந்தது.

பத்து நாட்களாகிவிட்டன. சிங்கப்பெருமாள் உணவு உறக்கம் கொள்ளாதிருந்தார். அவருக்குள்ள செல்வாக்கை வைத்து கம்பெனி அதிகாரிகளைக் கொண்டு இது பற்றிய தகவலைச் சேகரிக்கச் செய்தார். தெருக்கூத்துக்கள், திருவிழாக்கள், எங்கெங்கே கூட்டம் சேருகிறதோ அங்கெல்லாம் சிப்பாய்கள் வலை போட்டுப் பார்த்தார்கள். ஒரு வழக்கைக் கண்டுபிடிக்க முயன்றால் இடையிலே ஒன்பது வழக்குகள் குறுக்கிடும். தேடிய வழக்கு மட்டும் புலனாகாது. இது, பாதுகாப்பு இலாகாவில் ஆண்டாண்டு காலமாக நிலவிவரும் உண்மை. சிப்பாய்கள் குஞ்சரத்தைத் தேடினார்கள், மான்கொம்பைக் கொலை செய்தவனைத் தேடினார்கள். அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட சிப்பாய்களின் கவனத்திற்கு பல வழக்குகள் அகப்பட்டன. அதெப்படி அகப்படும்? சிப்பாய்கள் இவைகளையெல்லாம் எப்படிக்கண்டுபிடிக்கிறார்கள்? பள்ளிகளில் போதிக்கும் பாடம் சில இடங்களில் தொழில் துறைகளில் முரணாக வந்து நிற்கிறது. ஆசிரியர் மாணவர்களுக்குப் போதிக்கும்போது எல்லோரையும் நம்புவது பைத்தியக்காரத்தனம்; அனைவரயும் சந்தேகிப்பது கோழைத்தனம் என்கிறார். ஆனால் சிப்பாய் உத்தியோகத்தில் அமர்கிறவர்களுக்கு இந்தச் சித்தாந்தம் பொருந்துவதில்லை. கண்ணில் படுகிறவர்களையெல்லாம் சந்தேகித்தால்தான், மிரட்டினால்தான் பத்தில் இரண்டு குற்றவாளிகளை அவர்களால் கண்டுபிடிக்க முடிகிறது. இரண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க எட்டு நிரபராதிகள் அவதிப்படுகிறார்கள். இதைப் போக்க வழியே இல்லை.

★

சூரைக்குடிக்கு மேற்கே சுமார் இருபது மைல் தூரத்தில் **இளையாத்தக்குடி** என்ற ஊர் இருக்கிறது. அழகான குளங்களுக்கும், அடர்த்தியான சோலைகளுக்கும் அந்த ஊரைத்தான் உதாரணத்துக்குச் சொல்லுவதுண்டு. அந்த ஊர் ஜமீன்தார் பொன்னழகருக்குக் கட்டுப்பட்டிருந்தது. ஆனாலும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அந்த ஊரோடு அதிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். சில ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த ஊரில் 'பூசை' ஒன்று நடைபெறும். ஏராளமான ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் இலவசமாக உணவளிப்பதை 'பூசை' என்று செட்டிநாட்டுப் பகுதியில் சொல்லுவார்கள். இப்போதும் செட்டிநாட்டு வட்டாரத்தில் பூசை என்றால் 'சாப்பாடு' என்ற பொருளைத்தான் அனைவரும் கற்பித்துக்கொள்வார்கள்.

குஞ்சரம் காணாமற்போய் பதினைந்து நாட்களுக்குப் பிறகு இளையாத்தக்குடியில் ஒரு 'பூசை' நடந்தது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அந்தப் பூசையில் கலந்துகொண்டார்கள். இரண்டு மூன்று திங்கள்களுக்கு முன்பே முறைப்படி பறையடித்து அறிவித்து விட்டு நடத்தப்படுகிற பூசையல்லவா அது!

இளையாத்தக்குடி ஜமீன்தார் பூசையன்று இரவு பொய்க்கால் குதிரை ஆட்டத்திற்கும், பொம்மலாட்டக் காட்சிக்கும் ஏற்பாடு செய்திருந்தார். கிராமபுறத்து மக்கள் அந்த வேடிக்கைகளைப் பார்ப்பதற்கு கூட்டம் கூட்டமாக வேறு வந்து திரண்டிருந்தார்கள். இந்த ரகளையில் கம்பெனிச் சிப்பாய்கள் துப்பறியத் தொடங்கினார்கள். கூந்தல் நீளமுள்ள பெண்களெல்லாம் குஞ்சரமாகப் பட்டாள் அவர்களுக்கு. எல்லாப் பெண்களையும் கூர்ந்து பார்ப்பதும் எவனாவது கடிந்து பேசினால் அவனிடம் மன்னிப்புக் கேட்பதுமே அந்தச் சிப்பாய்களுக்கு அன்று முழுதும் வேலையாகப் போய்விட்டது.

இரவு வந்தது. பொய்க்கால் குதிரைக்காரன் தேசிங்குராசன் சரித்திரத்தை நடத்திக்கொண்டிருந்தான். ஆட்டமும் தாளமும் சபையை ரசனைக்குள்ளாக்கி வைத்திருந்தது. கன்றும் மயங்கும் ஓசை நயத்தில், கடிக்கவரும் பாம்பும் பேதலிக்கும் இசை வெள்ளத்தில் ஒரு ஜீவன் - அதுவும் பெண்பிறவி - இருபது வயதிருக்கும்—அந்தக் கூட்டத்தில் சிப்பாய்களின் சந்தேகத்திற்குரியவளானாள். விழிகளுக்குப் பலவித குணங்கள் உண்டு போலும். காதல் விவகாரத்தில் கனிவையும் போராட்ட விவகாரத்தில் அக்கினியையும் தன்னம்பிக்கை இழந்த நேரத்தில் மருட்சியையும் அந்த விழிகள் எங்கிருந்தோ சம்பாதித்துக்கொள்கின்றன. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்பது கண்களை வைத்துத்தான் சொல்கிறார்களோ? இல்லாவிட்டால் அந்தச் சிப்பாய்கள் அந்தப் பெண்ணை எப்படி சந்தேகித்தார்கள்?

சிப்பாய்கள் திசைக்கு ஒருவராகப் பிரிந்து போய் அந்த யுவதி நின்ற இடத்தைச் சூழ்ந்துகொண்டார்கள்.

அவள் வெறிக்க வெறிக்கப் பார்த்தாள். உடம்பு அவளுக்கு வெடவெடத்தது. முதலில் ஒரு சிப்பாய் துணிந்து அவளிடம் போய்,

"ஏய், நீ எந்த ஊர்? உன் தகப்பனார் பெயர் என்ன?" என்றான்.

அவள் அதற்கு எதுவும் பதில் சொல்லவில்லை. வரமுடியாது என்பதற்கு அடையாளமாக தலையை அசைத்தாள்.

"நீ என்ன ஊமையா?"-என்றான் சிப்பாய் மறுபடியும்.

அவள் அதற்கும் தலையை அசைத்தாள்.

"நீ முறையாகக் கூப்பிட்டால் வரமாட்டாய்? ஓடுகாலி!" என்று கட்டைத் தொண்டையில் கத்திக்கொண்டே அவள் கையைப் பற்றி இழுத்தான் அந்தச் சிப்பாய். அதற்குள் கூட்டத்திற்குள் சலசலப்பு ஏற்பட்டு அது பெரிய கலவரமாகவே உருவெடுத்துவிட்டது. கம்பெனிச் சிப்பாய்கள் பெண்களைக் கெடுக்க வந்திருப்பதாகச் செய்தி பரவியது. ஆடவர்கள் எல்லோரும் கம்பும் கையுமாக தெருவுக்கு ஓடிவந்தார்கள். பலர் தாக்குண்டார்கள். அவர்களில் ஒரு சிப்பாய் பலமாகத் தாக்கப்பட்டான். இளையாத்தக்குடி ஜமீன்தார் கம்பெனி அதிகாரிகளுக்கு மிக வேண்டியவர் என்பதால் தாக்குண்ட சிப்பாய்களுக்கு உபசரணைகள் செய்தார். ரத்தக்காயங்களுக்கு மருந்து வைத்துக் கட்டினார். அதுவரை, ஜமீன்தார், சிப்பாய்கள் உள்ளபடியே முறைதவறி நடந்ததாகத்தான் கருதியிருந்தார்.

தாக்குண்ட சிப்பாய் முழு விபரத்தையும் ஜமீன்தாரிடம் எடுத்துச் சொன்னான். அதன் பிறகுதான் அவருக்கு முழுக்கதையும் தெரிய வந்தது. உடனே வேலைக்காரனை அழைத்து சற்று முன்பு நடைபெற்ற குழப்படியில் வேறு சிப்பாய்கள் யாராவது தாக்குப்பட்டிருக்கிறார்களா என்று பார்த்து வரச்சொன்னார். வேலைக்காரன் ஓடிப்போய் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் திரும்பி ஓடி வந்தான். ஜமீன்தார் பதட்டத்தோடு அவனது பதிலை எதிர்பார்த்தார். கம்பெனிச் சிப்பாய்கள் ஒரு பெண்ணைப் பிடித்து வருவதாகச் சொன்னான். ஜ்மீன்தாருக்கு அதிலொரு மகிழ்ச்சி. ஏனென்றால் குஞ்சரத்தை அவர் பலமுறை பார்த்திருக்கிறார்; அவளது எழிலைக் கண்டு களித்திருக்கிறார். குஞ்சரத்தை மணக்க எவனுக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ என்றுகூடப் பெருமூச்சு விட்டிருக்கிறார். அப்படிப்பட்டவள், தனது மாளிகைக்கு வருகிறாள், அதுவும் கைதியாக வருகிறாள் என்பதிலே அவருக்கு மெத்தச் சந்தோஷம். ஒருவரின் பலவீனத்தை மற்றொருவர் பயன்படுத்திக் கொள்வது மனித வாழ்க்கையில் பேர்பெற்ற கலை. அந்தக் கலையைப் பயன்படுத்திக் கொள்வதிலே செல்வந்தர்கள் வல்லவர்கள். இளையாத்தக்குடிப் **பொன்னழகர்** இதை ஒரு பெரு வாய்ப்பாகவே கருதிக்கொண்டிருந்தார். சிப்பாய்களின் செருப்புச் சத்தம் கேட்டது. குஞ்சரம் தன்னை வணங்குவாள், உதவி கேட்பாள் என்று எண்ணிய பொன்னழகர் தன் உடைகளை ஒரு முறை சரிசெய்து கொண்டார்; மீசையை ஒதுக்கிவிட்டார். தொண்டையைக் கனைத்தார்.

சிப்பாய்கள் வாசற்படியேறினார்கள். மூன்று சிப்பாய்களுக்கு மத்தியில் அந்த பெண் வந்தாள். வந்த சிப்பாய்கள் ஜமீன்தாருக்கு மரியாதை செலுத்திவிட்டு அந்தப் பெண்ணை அவரிடம் காண்பித்து 'இவள்தானே சூரைக்குடி சிங்கப்பெருமாள் அம்பலகாரர் மகள்?' என்று கேட்டார்கள்.

பொன்னழகர் சிரித்தார். அவளைத் தெரிந்துகொள்ளாமலா அவளைத் தேடுகிறீர்கள்? அவளெங்கே இவள் எங்கே? என்று கோபமாகப் பதில் சொன்னார் பொன்னழகர். கோபம் வரத்தானே செய்யும்! அவரும் குஞ்சரத்தைக் காணத் துடித்துக் கொண்டிருந்தவரல்லவா! சிப்பாய்களுக்கு முகம் வாடிப் போய்விட்டது.

"பூ! இவ்வளவுதானா? இந்தச் சனியனைப் பிடிக்கத்தானா இவ்வளவு அமளி" என்று சலித்துக்கொண்டே ஒரு சிப்பாய் அந்தப் பெண்ணைக் கழுத்தைப் பிடித்து வெளியிலே தள்ளினான். அப்போது ஒரு ஆச்சரியகரமான நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அந்த பெண்ணின் கூந்தல் அப்படியே கொத்தாகக் கீழே விழுந்தது. ஜமீன்தார் பொன்னழகருக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்போதுதான் அந்த உருவம் பேச ஆரம்பித்தது. "**நான் பெண்ணல்ல; ஆடவன்**" என்றது அந்த உருவம். சிப்பாய்கள் திகைத்தார்கள். ஆனால் இந்த மாறுவேடத்தில் ஏதோ மர்மம் இருப்பதாகவே அவர்கள் கருதினார்கள். காயம்பட்டு படுத்த படுக்கையாகக் கிடந்த சிப்பாய் இன்னொரு சிப்பாயை அழைத்து, காதில் ஏதோ சொன்னான். அதைக் கேட்டுவிட்டு வந்த சிப்பாய் மாறுவேடக்காரனிடம் வந்து தடியைக் காட்டி, கத்தியைக் காட்டி மிரட்டி விசாரிக்க ஆரம்பித்தான்.

"டேய், நீ ஒரு பெண்ணைக் கடத்திக்கொண்டு வந்து விட்டாயல்லவா?" என்று கேட்டான்.

"ஆம்" என்றான் அந்த இளைஞன்.

"இப்போது எங்கே அவள்?"

"பொன்னமராவதி என்ற ஊருக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் இருக்கிறாள்,"

"நாங்கள் அவளைப் பார்க்க வேண்டும்."

"தூரம் அதிகமாயிற்றே!"

—இப்போது பொன்னழகர் குறுக்கிட்டு 'வண்டியில் போகலாம்' என்றார்.

குஞ்சரத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை பொன்னழகரைப் புரட்டிப் புரட்டி எடுத்தது.

இரண்டு வண்டிகளைப் பூட்டிக்கொண்டு எல்லோரும் புறப்பட்டு மறுநாள் பிற்பகல் அந்தக் கிராமத்தை அடைந்தார்கள்.

"ஏய், குஞ்சரம் எங்கே? கூட்டி வா!" என்று மிரட்டினார் பொன்னழகர்.

அப்போதுதான் வாலிபன் திடுக்கிட்டான்.

- முடியவில்லை -

எங்கும் கிடைக்கும்

- 16 -

என்ன சொல்லுவது? உலகம் நடிப்பைக்கண்டு ஏமாறுகின்றது. நல்லவனாக இல்லாவிட்டாலும் நல்லவனாக நடித்தால் போதும் என்கிறது. உண்மையான அன்பையோ அறிவையோ யாரும் நாடிப் போற்றுவதாகக் காணோம். அன்பும் அறிவும் இருப்பதாகக் காட்டிக் கொண்டால் போதும் என்று மன நிறைவு கொள்ளுகின்ற நிலைமைதான் இருக்கிறது.

"எல்லாரும் நலம்தான்" என்று அவன் கேட்டதற்கு விடை சொல்லிவிட்டு "நன்றாகப் படிக்கிறாயா?" என்று பெரியசாமிதான் ஒரு வினா தொடுத்தார்.

"படிக்கிறேன் அப்பா என்றான் ஞானசம்பந்தன்.

"சரி நாளைக்கு காலையில் ஊருக்கு வரவேண்டும் நீ. உன் அம்மா உன்னைப் பார்க்க வேண்டும் என்றாள்" என்று ஒருசெய்தியைச் சொன்னார் பெரியசாமி.

ஞானசம்பந்தனின் உள்ளத்தில் ஊசிகொண்டு குத்தியது போல் இருந்தது. 'நாளை வருகின்றேன் உண்மையாக' என்று அங்கே அமுதாவுக்கு வாக்கு கொடுத்துவிட்டு வந்தான். ஆனால் இங்கே 'அம்மா அழைக்கிறார்கள்' என்று அப்பா சொல்கிறார். என்ன செய்வது என்று எண்ணினான்.

ஊருக்கு வரவில்லை என்றால் மறுபடியும் தாயும் தந்தையும் வெறுப்புக் கொள்ளக்கூடும். ஆனால் வருவதாகச் சொன்னாலோ விருப்பு வளரும். இப்போது எப்படியாவது அவர்கள் மனதில் விருப்பு வளர்க்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டான்.

"ஆகட்டும் அப்பா" என்றான்.

மகன் சொன்னதைக் கேட்டுத் தந்தைமகிழ்ச்சியோடு துயின்றார்.

சிவகாமி அம்மாள் மகன் வந்ததை பெரிய விழாபோல் கொண்டாடினார்கள். நெடுநாட்களுக்குப் பிறகு மகனைக் கண்டதிலே மட்டும் அந்த அம்மாளுக்கு மகிழ்ச்சி இல்லை. மகனமீது மாளாத பெருங்கோபம் கொண்டிருந்த தன் கணவன் மனம்மாறி விட்டதே என்பதில் பெருமை.

"பார்த்தீர்களா நீங்கள் என்னமோ சொல்லிக்கொண்டிருந்தீர்களே. நம் சம்பந்தன் நல்லவன். கெட்டிக்காரன் - நன்றாகப் படிப்பான் - பாருங்களேன்" என்று கணவனிடம் சொல்லிச் சொல்லி மன நிறைவு தேடிக்கொண்டிருந்தார்கள்.

"சரி. நான் என்ன வேண்டாம் என்று சொல்கிறேன்" என்று பெரியசாமி இடையிடையே அணை போட்டுக் கொண்டிருந்தார்.

ஞானசம்பந்தனும் எழிலனும் மாலையில் மதகடி - ஏரிக்கரை - இலுப்பைத்தோப்பு என்று எங்கெங்கோ அலைந்தனர். புதிதாக சில நிலங்களில் சவுக்கு நட்டிருந்தனர். முன்பெல்லாம் அந்த நிலங்களிலே நெல் மணிகள் விளைந்ததை ஞானசம்பந்தன் கண்டிருந்தான்.

"ஏன் இந்த நிலங்களில் சவுக்கு போட்டிருக்கிறார்கள் ?" என்று கேட்டான் எழிலனை.

"உனக்கேனப்பா இந்தக் கவலை எல்லாம். நாங்கள் எப்படியோ போகிறோம்" என்று சலிப்பாகச் சொன்னான்.

"ஏன் எழிலன் அப்படிச் சலித்துக் கொள்ளுகின்றாய் ? சொல்லேன் கேட்கிறேன்."

"சொன்னால்தான் உனக்கெங்கே விளங்கப்போகிறது. எங்கள் ஊரிலே..."

"அதென்ன உங்கள் ஊர் ?"

"சரி. நம் ஊரில் பயிரிட ஆட்கள் சரியாகக் கிடைக்கவில்லை. அதனால் சில நிலங்களில் வேலை குறையும் என்ற எண்ணத்தில் சவுக்குபோட்டிருக்கின்றார்கள்."

"வேலைக்கு ஆட்கள் இல்லையா ? புதுமையாக இருக்கிறதே. ஆட்களுக்கு அல்லவா வேலை கிடைக்கவில்லை ?"

"அதுவும் மெய்தான். நாங்கள் கொடுக்கின்ற கூலிக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. கிடைக்கின்ற ஆட்கள் கேட்கிற கூலியை எங்களால் கொடுக்க முடியவில்லை."

"அதற்கு இதுதான் வழியா?"

"பின்னே என்ன செய்வது ? நீதான் சொல்லேன்."

"நான் சொல்வேன் ஆனால் உனக்கு கோபம் வரும்.!"

"சொல் கேட்கிறேன்."

"உங்களுக்கு - ஆட்கள் கிடைக்கவில்லை அல்லவா ?"

"அதனால் முடிந்த அளவு வைத்துக்கொண்டு மீதியை—"

"மீதியில் சவுக்கு போட்டு விட்டோம்.

"அதுதான் பார்க்கிறேனே."

"பின் ?"

"உழவர்களுக்கு விட்டு..."

"சரிதான். நீயும் அந்தப் பல்லவிதான் பாடுகின்றாய் ?"

"எந்தப் பல்லவி ?"

"மீதியை உழவர்களுக்கு விட்டு அவர்களிடம் வாரம் வாங்கிக்கொள்ளச் சொல்லும் பல்லவி ?"

"தெரியுமா உனக்கு அந்த வழி ?"

"நன்றாகத் தெரியும்."

"பின்னே அதை ஏன் பின்பற்றவில்லை ?"

"உனக்கு இதெல்லாம் விளங்காது விடு. உன் செய்தியைச் சொல்" என்று பல துறைகளில் அவர்களுடைய பேச்சு சென்று வந்தது.

விளக்கு வைத்துச் சிறிதுநேரமானவுடன் மறுபடியும் பள்ளிக்கூடத்துத் திண்ணையில் சந்திப்பதாகச் சொல்லிக்கொண்டு இருவரும் பிரிந்தனர்.

பள்ளிக்கூடத்துத் திண்ணையில் அன்று இரவு ஞானசம்பந்தன் காதலின் மேன்மையையும், பிறவற்றையும் எழிலனுக்கு எடுத்துவிளக்கிக் கொணடிருந்தான். எல்லாவற்றுக்கும் எழிலன் 'ஊம்' கூட்டிக் கேட்டுக்கொண்டிருந்தாலும் இவன் பட்டணம் போனபின் ஏதேதோ பேசுகின்றானே என்றுதான் எண்ணினான்.

"இதெல்லாம் புத்தகத்திலே படித்தாயா ?"

என்று இடையிலே ஒரு வினா தொடுத்தான்.

ஞானசம்பந்தனுக்கு என்ன சொல்லுவது என்று முதலில் விளங்கவில்லை. சற்று பொறுத்து "ஆமாம். புத்தகத்திலும் படித்தேன். சொல்லவும் கேட்டேன்" என்று சொன்னான்.

ஞானசம்பந்தன் தன்னைவிட்டு நெடுந்தொலைவு போய்விட்டான் என்பதையும் தனக்கும் அவனுக்கும் இடையில் எவ்வளவோ வேறுபாடுகள் ஏற்பட்டுவிட்டன என்பதையும் எழிலன் உணர்ந்து கொண்டான்.

சிவகாமி அம்மாளின் ஆசையை நிறைவேற்றும் வகையில் பின்னும் இரண்டு நாட்கள் மாத்தூரிலேயே தங்கியிருந்தான் ஞானசம்பந்தன். அந்த இரண்டு நாட்களும் அவனுக்கு ஏதோ இரண்டு ஆண்டுகள்போல் நீண்டு நீண்டு நெடிதாகிக் கொண்டிருந்தன. சென்னை வாழ்க்கை பழகிவிட்டதும் ஒரு காரணம்தான், மாத்தூர் வாழ்க்கை அலுப்பும் சலிப்பும் தருவதற்கு. ஆனால் அதைவிட முக்கியமான காரணமும ஒன்று இருந்தது.

அமுதவல்லியிடம் நாளை வருகின்றேன் என்று சொல்லிவிட்டு வந்தான். அதோடு அவள் அழுத கண்ணீரையும் துடைத்து விட்டுவந்தான். அருணாசலமும் இவன் வரவை எதிர்நோக்கி இருப்பான். இத்தனைக்கும் மேலாக ஒருவேளை ஏகாம்பரம் அமுதவல்லியைக்கண்டுகொண்டால் ஆபத்தாயிற்றே என்று எண்ணிக் குழம்பிக்கொண்டிருந்தான்.

எழிலனுடன் என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தான். ஆனால் அந்தப் பேச்சில் மனம் கலந்து ஈடுபடவில்லை. எழிலன் மட்டும் "என்ன சம்பந்தா என்னவோபோல் இருக்கிறாய்?" என்று இரண்டு மூன்று முறை கேட்டான். "ஒன்றுமில்லையே நன்றாகத்தானே இருக்கிறேன்" என்று ஞானசம்பந்தன் சொன்னான். ஆனால் எழிலன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

"என்னவோ நீ பட்டணம் போனபின் ஆளே மாறிவிட்டாய். நல்லதற்கோ கெட்டதற்கோ போகப் போகத்தான் தெரியும்" என்று சொன்னான். "நான் ஒன்றும் மாறவில்லை. நீயாக ஏதாவது நினைத்துக் கொண்டால் அதற்கு நான் என்ன செய்வேன் ?" என்று அவனுக்கு மறுமொழி கூறினான்.

நாளை சென்னை செல்லலாம் என்று முடிவு ஆனதும் ஊரிலிருந்து போகும்போது அமுதவல்லிக்கு ஏதாவது கொண்டு

போய்க் கொடுக்கலாம் என்ற எண்ணம் வந்தது ஞானசம்பந்தனுக்கு. நெடுநேரம் சிந்தித்தான். நினைத்தவுடன் நினைத்த பொருளை வாங்கிடும் நிலை இருக்கும் சென்னையில் இருப்பவளுக்கு இந்த மாத்தூரிலிருந்து எதைக் கொண்டுபோவது, அங்கு எதுவும் கிடைக்குமே என்று அந்த முயற்சியைக் கைவிட்டான்.

ஆனல் அன்று இரவு இட்டலிக்கு சிவகாமி அம்மாள் சின்ன வெள்ளிக்கிண்ணம் நிரம்ப நெய் கொண்டு வந்து வைத்து, மிளகாய்த்தூளும் உப்பும் பூண்டும் கலந்து வைத்து'இதோ இன்னும் கொஞ்சம்' என்று நெய்யை விட்டுக் கலந்து கலந்து கொடுத்தார்கள்.

"வேண்டாம்!" என்று ஞானசம்பந்தன் தடுத்தான்.

"இங்கு இருக்கும்போது தானே. இதெல்லாம் அங்கே ஏது உனக்கு நெய்யும் தயிரும்?" என்று பெற்றதாய் பரிவோடு கேட்டார்கள்.

அவர்கள் பரிவை ஞானசம்பந்தன் கவனிக்கவில்லை. ஆனல் சென்னையில் ஏது நல்ல நெய்யும் தயிரும் என்று தன் தாய் சொல்லக் கேட்டதும் அவன் சிந்தை வேறு எண்ணங்களை எண்ணத் தொடங்கியது.

'அமுதவல்லி வீட்டிற்கு நெய் கிடைக்குமோ என்னமோ' என்று எண்ணினன். 'கிடைக்காவிட்டால் நாம் கொண்டுபோனல் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் அமுதவல்லிக்கு' என்று தீர்மானித்தான்.

"அம்மா" என்று அழைத்தான். குரலில் கனிவும் குழைவும் இணைந்திருந்தது.

"என்ன சம்பந்தா?" என்றார் சிவகாமி அம்மாள்.

"நாளைக்குப் போகின்றபோது கொஞ்சம் நெய் கொண்டு போகிறேனே" என்றான்.

"நானே சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனல் நீ என்ன சொல்லுவாயோ என சும்மா இருந்தேன்." என்றார் சிவகாமி அம்மாள்.

அந்த அம்மாளுக்கு ஒரே மகிழ்ச்சி. மகன் உடம்பையும் கவனித்துக் கொள்ளத் தொடங்கி விட்டானே என்று.

அந்த அம்மாளுக்கு என்ன தெரியும் தன் மகன் தன் உடம்போடு வேறு உடம்பைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கிவிட்டான் என்று?

மறுநாள் ஊரிலிருந்து வந்தவுடன் ஞானசம்பந்தன் நெய்யை ஒரு கையில் எடுத்துக்கொண்டு அமுதவல்லியின் இல்லம் நாடிச் சென்றான். "எங்கே போயிருந்தீர்கள் இத்தனை நாட்களாக?" என்று அமுதவல்லி கேட்காமலேயே அவள் முகக்குறிப்பிலிருந்து அவள் அதைக் கேட்பதாக உணர்ந்துகொண்டான்.

நெடுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு விடைபெற்றுக் கொண்டு வெளியில் வரும்போது அருணாசலமும் உடன் வருவதைக் கண்டு நின்றான்.

"என்ன?" என்று கேட்டான் அவனைப் பார்த்து.

"எங்கே இரண்டு நாட்களாக ஐயாவை காணுமே?"

"எங்கோ போயிருந்தேன். ஏன்?"

"இரண்டு நாட்களாகச் செலவுக்கு ஒன்றும் இல்லை. அது தான்."

ஞானசம்பந்தனுக்கு உள்ளத்தில் சுருக்கென்று ஏதோ தைப்பதைப்போல் இருந்தது. இரண்டு நாள் போய் வருவதற்குள் அமுதா அழுது அன்பைச் சொரிந்ததை அவனல் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனல் அருணாசலமோ 'செலவுக்குக் காணும் பணம்' என்று சொல்லுகின்றான். இவன் செலவுக்கு நான் தரவேண்டுமா என்ன என்று மனத்தில் புழுங்கினன். அவனுக்கு வந்த ஆத்திரத்தில் ஏதாவது ஏசிவிட்டு வந்திருப்பான், ஆனல் அமுதாவின் முகத்தை அடுத்த நாள் காணவேண்டுமே என எண்ணி கோபத்தை அடக்கிக்கொண்டு,

"பத்து ரூபாய் கொடுத்தேனே?" என்றான்.

"அது அன்றே தீர்ந்துவிட்டதே. இன்று ஏதாவது" என்று கையை நீட்டினன்.

'சரி. இவன் தொல்லையை ஏற்றுத்தான் ஆகவேண்டும் போல்இருக்கிறது என்றுஎண்ணியவனுய் ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான்.

"இது போதாதே சார்."

"அதற்கு நான் என்ன செய்ய?"

"இன்னும் ஒரு ஐந்து போதும்" என்றான் அவன்.

"இந்தா" என்று ஒரு ஐந்து ரூபாயைக் கொடுத்து விட்டு இவன் பெரிய ஆட்கொல்லியாக இருப்பான்போல தோன்றுகின்றதே என எண்ணியவாறு நடந்தான்.

- தொடரும் -

தமிழை வளர்ப்பது எப்படி ?

ஏ. வி. இராமன்

செத்த மொழியையும் உயிர்ப்பித்துவிட்டார்

இன்னொரு செய்தி. வாசகர்களே ! கேளுங்கள். ஏறக்குறைய 1800 ஆண்டுகட்கு முன்னே செத்துச் சுண்ணும்பாய்ப் போன ஹீப்ரு மொழிகளும் தொடர்களும் எந்த நாட்டில் கிடைத்தாலும் அவற்றைத் தொகுத்து, அவைகள் வழக்கிறந்து போனுலும் குற்றமில்லையென்று ஹீப்ரு மொழியில் சேர்த்துக்கொண்டு அம்மொழிக்குப் புத்துயிரை அளித்துவிட்டார்களாம் ! இது மொழி வளர்ச்சியா ? நம் நாட்டுத் தாந்தோன்றிகளின் செயல் மொழி வளர்ச்சியா ? சிறிது அமைதியுடன் கருதிப் பாருங்கள்.

13. 'குலத்தைக் கெடுக்க வந்தக் கோடரிக்காம்பு' என்னுந் தொடர் தமிழ் வழக்கில் பெரிதும் வழங்கி வருகிறது. கோடரிக்காம்பை எந்த மரத்திலிருந்து வெட்டிச் சீவிக் கோடரியிற் பதித்தோமோ அதே காம்பு தன் தாய் மரத்தை வெட்டிச் சாய்க்கப் பயன்படுங் காரணம் பற்றியே அது, 'தன் குலம் வெட்டி' என இன்னொரு பெயராலும் வழங்கப்படுகின்றது. அச்செயலை ஒரு மனிதனுக்கேற்றிச் சொன்னுல் அவன் எந்தக் குலத்திற் பிறந்தானே அந்தக் குலத்தை அழித்துவிட்டவன் என்று பொருள்படுகின்றது. மனிதனின் காம்பின் இழிசெயலை வெளிப்படையாக உணர்த்தாமல், குறிப்பாக உணர்த்துந் திறம் இத்தொடரில் அமைந்து கிடக்கின்றது.

14. 'அவன் வசங் கண்டவன்'– என்னும் அரிய தொடரொன்று பேச்சு வழக்கில் இருக்கிறது.

15. எதிலும் பழகியறிந்தவன் என்னும் பொருளோடு நின்றுவிடவில்லை எல்லாவற்றிலும் பழகியறிந்த முதியோனைப் பழமுந்தின்று கொட்டையும் போட்டவன் என்று நாம் இன்னும் பேசி வருகின்ருேம்.

16. உண்மை நிலையறிந்தவன் : இவனை 'காலங்கண்ட மனிதன்' என்றும் சொல்வது வழக்கமாயிருக்கிறது.

17. ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்து தன் காரியத்தை நன்கு நிறைவேற்றிக் கொள்பவன் என்னும் பொருளை தெளிவாகக் காட்டுகின்றது; தந்நயப் புலியும் இவர்தாம் ! உருசி கண்ட பூனையாகும் இவர்தாம் ? வரிசை கண்ட மருமகப் பிள்ளையும் இவர்தாம் !

18. 'வயிற்றிற் கொள்ளுதல்' என்னுந் தொடர் உண்ட உணவை வயிற்றிலிடல் என்னும் பொருளை மட்டும் உணர்த்தவில்லை. புரத்தல் அல்லது காப்பாற்றுதல் என்னும் பொருளையுந் தருகின்றது. ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்யப் பிரபந்தத்துள் மேற்கூறிய பொருளில் வந்த தொடர்கள் காணப்படுகின்றன.

19. 'அவனோர் ஆகாசப் பஞ்சாங்கம்' என்று சொல்வதை நாம் கேட்டிருக்கிருேம். இத்தொடர், மலைப் புளுகனையும் 'பெரும் பொய்க்காரனையும்' குறிக்கும். ஆகாச பஞ்சாங்கம் எவ்வளவு உண்மையோ அப்படியே இவன் பேச்சு. அண்டப் பொய் பேசுகின்றதையே வாழ்க்கையாகக் கொண்டவர்களைத்தான் இத்தொடர் சுட்டிக்காட்டுகின்றது.

20. 'ஊமைக் கோட்டான் வெயில்' ஓர் அரிய தொடர்ப் பொருளைப் பார்ப்போம். வானத்தில் எங்கும் மேகமானது மூடிக்கொண்டிருந்தாலும் வெயில் சில சமயம் பளிச்சென்று உடம்பில் உறைக்கிறதல்லவா ? அந்நிலையைத்தான் இத்தொடர் குறிக்கின்றது.

அறிஞர் சுந்தரம் பிள்ளையவர்களின் கோரிக்கை

மனேன்மணிய நாடக ஆசிரியரான அறிஞர் சுந்தரம் பிள்ளையவர்கள் 1891-ம் ஆண்டு தாமெழுதிய முகவுரையில் "இவ்வண்ணம் எவ்விதத்திலும் பெருமை சான்ற இத்தமிழ் மொழி பற்பல காரணச் செறிவால், சில காலமாக நன்கு பாராட்டிப் பயில்வார் தொகை சுருங்க, மாசடைந்து நிலை தளர்ந்து, நேற்றுதித்த......பாஷைகளுக்கும் சமமோ தாழ்வோ என்று அறியாதார்பலரும் ஐயமுறும்படி அபிவிருத்தியற்று நிற்கின்றது. ஆதலால், அருமையாக பூர்வ நூல்களைப் பாதுகாத்துப் பயின்று வருதலாகிய முதற் கடமையோடு அவ்வழியே முயன்று அந்த அந்தக் கால நிலைக்கேற்றவாறே புது நூல்களை இயற்ற முயலுதல் தமிழ் நாடென்னும் உயர்குடியிற் பிறக்கும் ஒவ்வொரு தலைமுறையார்க்கும் உரித்தான இரண்டாங் கடமையாக ஏற்படுகின்றது" என மனங் கொதித்துக் கூறினர்.

வழக்கறிஞர் கே. எஸ். சீநிவாசப் பிள்ளையின் கோரிக்கை

அவருக்குப் பின்வந்த தஞ்சை வழக்கறிஞர் கே. எஸ். சீநிவாசப் பிள்ளையும் இன்னும் ஒருபடி மேலாகக் கூறினர். எவ்வளவு கூறினும் தமிழ்நாடு அசையவில்லை. மேற்கூறிய வெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாயிற்று. தமிழ் வளர வேண்டுமானல் மேற் சொன்ன அறிஞர்களின் அறிவுரையைப் பின்பற்றியேயாக வேண்டும். மேடைப் பேச்சாளர்களும், பத்திரிகை எழுத்தாளர்களும் மேற்கூறிய அறிவுரைகளைக் கெட்டியாகத் தானே தலைப்பில் முடிந்து கொள்ளவேண்டும். ★



சென்னை-600 008
198379

வெண்பாப் போட்டி

12. 'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

இந்திப் பிணம்நச்சும், இட்டம்போற் கூச்சலிடும்
சிந்தனையால் செந்தமிழர் சீரழிக்கும்—தந்திரமாய்ப்
பாருள் பலர்மெச்சப் பாங்காய்ப் பறந்துவரும்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—தாம்பரக்கிழான், சென்னை.

ஊர்முழுதும் சுற்றிடலால் உற்றுரைக் காத்திடலால்
பார்முழுதும் கத்திக் களைத்திடலால்—சீர்மையிலா
ஆரும் கரித்துணிகண்(டு) அஞ்சிடலால் எந்நாளும்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—த. தட்சிணமூர்த்தி, நெட்டப்பாக்கம்.

உண்ணும் பொழுதத்தே உற்றுரைக் கூவுவதில்
கண்ணும் கருத்துங்கொள் பண்பினிலே—மண்ணுளும்
சீருக்குச் சுற்றத்தைச் செட்டாக வைத்துள்ள
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—திருமணி, சென்னை.

விருந்தென்றல் ஓடுவதால் வேண்டார் உளரால்
இருக்குமிடத் தோர்கூட்டம் உண்டால்—பொறுப்பின்றிப்
பாருக்குள் எங்கும் பறந்தோடிச் செல்லுவதால்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

தன்னலங் கொள்காகம் தன்னினத்தை எந்நாளும்
அன்பாய்க் கரைந்தே அழைத்துண்ணும்—பன்னினம்வாழ்
பாரதத்தில், தன்னினம்பார்த் தாட்கொள்ளும் நாலரைக்கண்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—ஐ. முகம்மது அலி, செங்கற்பட்டு.

வஞ்ச மனத்தினிலே, மாற்றுரின் கைப்பொருளை
எஞ்சாது தம்மினத்திற் கீவதிலே—கொஞ்சுதமிழ்
சேரும் இசைக்குயிலை, சேர்க்காமல் கொத்தலிலே
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—கலைச்செல்வி, துரிஞ்சிப்பட்டி.

சுற்றித் திரிவதனுல் சுற்றமொடு உண்பதனுல்
பற்றியசொல் பல்கால் பகர்வதனுல்—முற்றவே
நீரில் குளித்து நினைந்ததைச் செய்வதனுல்
'நேரு'வுக்துக் காக்கை நிகர்.

கி. சிந்தனைச்செல்வன், சென்னை-15.

பல்லிடத்துச் செல்லுசலால் பல்லாரோ டுண்ணுதலால்
நல்லோர்கள் நாக்கலை நவிலுதலால்—எல்லோருந்
தேருமுயர் நற்பண்பால் நானிலத்தில் ஏற்றமிகும்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—வித்வான். முத்து. வே. கணபதி, கோனூர்கப்பூர்.

குஞ்சு குயிலாகிக் ''கூ''வென்ற காலை
நஞ்சுக்கண் காக்கையதை ஓட்டிடுமே—நெஞ்சம்
உருகும் தமிழன்னை சீரழியத் தான்விழையும்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—வி. மகாலிங்கம், கொழும்பு-6.

கண்துஞ்சும் நம்மவரைக் கண்விழிக்கக் கத்துவதும்
தன்வர்க்கம் பேணி சமதர்மப்—பண்பாடி
பாருக்குத் தோட்டியென்றே பட்டமும் பெற்றதனுல்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—வெ. வெங்கடசாமி, பாலையம்பட்டி.

உற்றுரை மேவுவதால் ஊரெங்கும் சுற்றுவதால்
வற்றுத வாய்ப்பேச்சின் வல்லமையால்—மற்றவரின்
சீருரிமை தான் பறித்துச் சிந்தை மகிழ்வதனுல்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—ரா. கேசரி, கோவை.

வானில் திரிவதனுல் வாய்நிறையப் பேசுவதால்
ஊனில் விருப்பங்கொண் டுண்பதனுல்—நானிலத்தில்
யாரும் அறிவதனுல் யான்சொல்வேன் நிச்சயமாய்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—சோ. கண்ணப்பன், பேரூர்.

நாடுபல சுற்றுதலான் நத்திப் பிழைத்திடலான்
கூடினரை ஏய்க்கக் குலவுதலான்—பீடுற்ற
பாரதத்துப் பண்பில் முதலமைச்சாய் வாய்த்ததிரு
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—வை. மணி, உடையார்பாளையம்.

கத்துவதால்; நெஞ்சிற் கரவதனுல்; மற்றவரை
எத்துவதில் தேர்ச்சி இருப்பதனுல்;—இத்தரையில்
ஓரக்கண் ணுற்பார்க்கும் ஒற்றுமையால்; பாரதத்து
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—''தேனரசன்'', கரையாம்பாளையம்.

சுற்றிப் பறத்தலால்; தூய்மையறப் பேசுவதால்;
பற்றும் தமதினத்துப் ட[illegible]சத்தால்;—குற்றமிலாப்
பாருக்குள் வஞ்சம் ப[illegible]வதால்; பண்டித
'நேரு'வுக்குக் காக்கை [illegible]ர்.

—சா. [illegible]ர்க்கண்டேயன், திருவில்லிபுத்தூர்.

உலகை எழுப்பலால் ஊ[illegible]முடைத்தால்
உலகியல் தந்திரம் உள்ள[illegible]ல்—தொல்புகழ்
மேருவுக்கு மேலான மே[illegible]மசேர் மேதையாம்
'நேரு'வுக்குக் காக்கை [illegible].

—த. சூ. ச. புகழ்சிங், உடன்குடி.

வண்ணம் மிகவுளதால்; வானில் பறத்தலால்;
எண்ணும் உளப்பண்பே இன்மையால்—நண்ணி
ஓரிடத்தும் நில்லாமல் ஊருராய்ச் சுற்றுவதால்;
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—ஓடை. இரா. வடிவேலன், பேரோடு.

ஓரக்கண் நோக்கெண்ணம் ஊர்சுற்றும் மாவேட்கை
காரப்பண் கூட்டுமகங் காரவுறு—ஓரவஞ்சப்
பேருள்ளம் தன்வழியே பொன்னென்னும் இன்னவற்றுல்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—உஸ்மான் அலி, கடையநல்லூர்.

கத்த விருந்தென்பார்! காலமெல்லாம் சுற்றிவரும்!
முத்தமிழர் வாழ்வின் முறையறியா(து)—எத்திடிவோ
நேருங் கருங்கொடி நீட்டிடவே ஓட்டமிடும்,
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—இறைவன், புதுவை.

கத்துவதும் ஓடுவதும் கண்ட இடமெல்லாம்
பித்தன்போல் சுற்றுவதும் பேசுவதும்—இத்தரையில்
நேர்மையுடன் நானுரைப்பேன் நேரிழையே! நிச்சயமாய்
'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

—க. தங்கவேலன், சேர்வைநகர்.

முல்லை
மார்ச் இதழ்
விற்பனையாகிறது.

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
ஏஜெ: வெ. சங்குபிள்ளை, 11 B, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ் நாடு

198379